திரு. மு. பழனிவேலன்: ஆத்தூர் வட்டத்தில் யானைக்கால் வியாதி இருக்கிறதே, அதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதைவிட அதிகமாக இந்த வியாதி உள்ள இடங்கள் இந்தப் பட்டியலில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கெங்கு இந்த வியாதி காணப் பட்டாலும் எழுதினால் அதுபற்றிக் கவனித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தஞ்சை மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இந்த வியாதி பயங்கரமாகக் காணப் படுகிறது. அங்கங்கே ரத்தப் பரிசோதனை செய்யப்படுமா ? முன்பு வழங்கப்பட்டதுபோல ஹெட்ரசான் டாப்லட் எல்லோருக்கும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ரத்தப் பரிசோதனைமூலம் யார் யாரிடத்தில் இந்த வியாதி இருப்பதாகக் கண்டுபிடிக்கப் படுகிறதோ அவர்களுக்கு இது வழங்கப்படும். தஞ்சாவூர், நாகப் பட்டிணம் ஆகிய இரண்டு இடங்களில் இந்தத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: வடாற்காடு மாவட்டம், வந்தவாசி பகுதியில் இது செயல்படுகிறது. என்றாலும் அங்கே ஆரோனெக்ஸ் என்ற எண்ணை கிடைக்கவில்லை என்பதாக 6 மாதமாகச் செயல் படாமல் இருக்கிறதே, உடனடியாக இந்த எண்ணையை விநி யோகிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 6 மாதமாக இருக்கக்கூடிய விஷயத்தை முன்பே தெரிவித்திருக்கலாம். இப்போதும் உடனே புகார் எழுதி அனுப்பினால் விசாரிக்க முடியும்.

எல்லாபுரம் கால்நடை மருத்துவ அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்

***574 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் பணிபுரியும் கால்நடை மருத்துவ அலுவலர்

1973 மார்ச் 30]

களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியாளரால் அண்மையில் அனுமதிக்கப் பட்டு, வேலை துவங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது சிமென்ட் இல்லாத காரணத்தால் வேலை நடைபெறவில்லை. ஆகவே, இதற்கான மொத்தத் தொகையையும் ஒதுக்கி, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த இல்லங்களைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்திலே இருந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் வழங்கப்படுகிற ரூ. 1,000ஐக் கொண்டு, மாவட்டக் கலெக்டர் அந்த பல ஒன்றியங்களிலே, எந்த ஒன்றியத்திற்குச் செய்வது என்பதை மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே தீர்மானித்து, ஏதாவது ஒரு இடத்திலே செய்கிறார். ஆனால், அரசு அப்படிப்பட்ட காரியத்தை, வீடுகள் கட்டுவதை இப்பொழுது செய்ய முடியவில்லையென்று கைவிட்டிருக்கிறது.

கோவை தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைக்கு வல்லுநர்கள்

*575 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை E.S.I. மருத்துவ மனையில் போதிய (Specialist) மருத்துவ அதிகாரிகள் நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கோயம்புத்தூர் E.S.I. மருத்துவமனையிலுள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகளிலும் தேவையான மருத்துவ வல்லுநர்களை அரசு நியமித்துள்ளது. தற்போது, 14—3—1973 வரை,

1. மருத்துவ இயல் பிரிவு	3
2. அறுவை மருத்துவம்	3